Reg. M. 2330. "SIDDHANTHAM" Vol. 16. No. 3

23 MAR 1943 MADRAS

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 16 | சித்திரபானுஸு பங்குனிமீ 1943ஆு மார்ச்சுமீ | இதழ் 3

பத்திராசிரியர் :—திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில்
24-வது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும்
மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# திறப்புரை

நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை யெப்போதும்
பன்னஞ்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே.

சீரும் புகழும் வாய்ந்த அன்பர்களே !

நம் பெற்ற சென்ற காலத்தினும் இற்றை
திகழ்கின்றது. எதனாலெனின், "ஊர்
ரகிய ஒன்று இது என்னப் பேர்பரந்த
ந்தச் சீகாழி நகரமானது மன்னிய

சைவத் துறையின் வழிவந்த குடிவளவர், பொன்னி வளந் தருநாடு பொலிவெய்த நிலவியது. இந்த நகரஞ் செய்த மாதவத்தின் பயனாகச் சைவ சமய பரமாசாரியர்களுள் முதல்வரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவவதாரஞ் செய்யப் பெற்றது. இதுகாறும் பொதுவாக வளர்ந்து வந்த சைவ சித்தாந்த மகா சமாஜம் இங்கே கூடப்பெற்றுச் சைவ சித்தாந்தச் செந்நெறியினால் எய்தும் பேற்றின் மேன்மையைக் குறிப்பால் உணர்த்துகின்ற திருநாள் இந்நாள் ஆகலின் என்க.

சைவ சித்தாந்த பரமாசாரியர்களால் காட்டப்பெறும் பேரா இயற்கைப் பேரின்ப வாழ்வானது முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அவற்றின் மேனிலையாகப் பெறற்பால தொன்றாகலின் இந்த மகா சமாஜத்தின் முப்பத்தேழாவது விழாவின் சைவர் மகாநாடு தனக்குச் சிறப்பாக உரிமையுடைய மெய்கண்ட சந்தான குருமரபினர் முன்னிலையில் குருலிங்க சங்கமம் மூன்றனுஞ் சிறப்புற்றோங்கும் இத்தலத்தின் அம்மையப்பர் திருவருளால் கூடப் பெறுகின்றது மிகவும் பொருத்தமானதே. ஆதலின் நல்லறிவாளர்க்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தருமென்று நம்புகிறோம்.

இந்த மகா சமாஜம் இதுகாறும் உலகம் உய்யவும் சைவம் நிலைபெற்றோங்கவும் செய்து வருகின்ற சிவநெறித் தொண்டுகள் பெரிதும் பாராட்டத் தக்கனவே என்பது நீங்கள் எல்லீரும் அறிந்திருப்பீர்கள். இந்த மகா சமாசத்தின் முப்பத்தேழாவது ஆண்டு விழாச் சைவர் மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி நம்மை விரும்பிய உங்கள் குருபத்தியின் சிறப்பைப் பாராட்டி இந்த மகாநாட்டை இப்பொழுது இங்கே திறந்து வைக்கிறோம்.

இந்த மகா சமாஜ விழா மகாநாடு தான் எண்ணியவெல்லாம் எண்ணியாங்கு எய்தி மேம்படவும், இதற்குத் தேர்ந்துகொண்ட அவைத் தலைவரும் சொற்பொழிவாளர்களும் கூறும் நல்லறிவுரைகளை இனிது கேட்டு நீங்கள் இன்புற்று வாழவும் கண்ணின் நல்லஃதுறும் கழுமல வள

நகாப பெண்ணினல்லாளொடு மிருந்த பெருந்தகைப் பெருமானைப் போற்றுவோம்.

*கண்ணுதலான் வெண்ணீற்றன் கமழ்சடையான் விடையேறி*
*பெண்ணிதமா முருவத்தான் பிஞ்ஞகன்பேர் பலவுடையான்*
*விண்ணுதலாத் தோன்றியசீர்ப் பிரமபுரந் தொழவிரும்பி*
*எண்ணுதலாஞ் செல்வத்தை யியல்பாக வறிந்தோமே.*

**வரவேற்புக் கழகத் தலைவர் திரு. S. சுப்பராய முதலியார் அவர்கள்**

# வ ர வே வ ற் பு ரை

*வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்*
*பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத*
*சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்*
*பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.*

**சிவநேசச்செல்வர்களே! அறிவிலும் அன்பிலும் சிறந்து விளங்கும் நம்பிமார்களே! நங்கைமார்களே!**

இங்குக் குழுமியுள்ள உங்களனைவரையும் மிக்க அன்புடன் வரவேற்கும் பேறு பெற்றுள்ளேன். இத்தகைய பேறு எளிதில் வாய்ப்பதன்று. இவ்வாய்ப்பும் இங்கு முதன் முதலாக நடக்கும் இம்மகா நாட்டிலேயே எனக்குக் கிடைத்தமை பற்றிப் பெருமகிழ்வெய்துகின்றேன்.

பண்டுதொட்டு, நம்நாட்டில் நிலவும் சைவ சமயத்துக்குத் தாயகமாக விளங்குந் தமிழ் நாட்டில், சிறப்பாகத் தெய்வீகம் பொலியக் காட்சியளிக்கும் சிவத்தலங்கள் பல கொண்டு விளங்குவது சோழநாடே. உடல் வளத்திற்கான இயற்கைப் பொருள்களைத் தம்மகத்தே கொண்டதுமன்றி உயிர் நலத்திற்கான பேற்றை அடியவர்மூலம் வெளிப்படுத்தும் தலங்கள் பலவற்றினுள் தலைசிறந்ததும், மூலாதார க்ஷேத்திரமென்று பெயர் பெற்றதும், குரு, லிங்க, சங்கமமென்னும் மும்மூர்த்தங்களையும் ஒருங்கேயுடையதும், சுட்டிக்

காட்டொணுப் பரம்பொருளைச் சுட்டிக் காட்டிய திருஞான சம்பந்தர் அவதரித்த பேறுபெற்றதும் ஆகிய, இக்காழியம் பதியில் நடைபெறும் சைவ சித்தாந்த மகாநாட்டை அனை வரும் பெருமகிழ்வுடன் வரவேற்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சைவ சமயமே சமயம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 36 ஆண்டுகளாகப் பல உண்மையன்பர்களால் நடைபெற்று வருகின்ற இச்சமாஜம் அரசியல் நெருக்கடியான இக்காலத்திலும் இம் 37-வது மகாநாட்டை இங்குச் சிறப் பாக நடாத்துவதற்குத் துணைபுரிந்த அன்பர்கட்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்களுடைய உண்மைச் சமயத்தை மறந்து புறச் சார்பினால் வெவ்வேறு துறையில் மயங்கியுழலும் மக்களுக்கு இம் மகாநாடு புத் துணர்ச்சியையும் மெய்ஞ்ஞானத்தையும் ஊட்டும் என்றே எண்ணுகின்றோம்.

சமயப் பணியையே தம் பணியெனக் கொண்டு கடந்த ஆண்டு மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டைத் திறம்பட நடத்தியும், சிவாலயத் திருப்பணி பல செய்தும், பலபுலவர் களால் சமயச் சொற்பொழிவாற்றுவித்தும், சமயவுண்மையை நிலைநாட்டிவரா நின்ற தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ ஆதீனகர்த்தரவர் கள் இம் மகாநாட்டைத் திறந்தருள எழுந்தருளியுள்ள பெருமை எம்மனோரால் பெரிதும் பாராட்டற்பாலது. மற் றுஞ் சமயத்திற்கென்றே திருத்தொண்டு செய்யும் திருவா வடுதுறை ஆதீனமும், சூரியனார் கோயிலாதீனமும், திருப் பனந்தாள் காசி மடமும், காழிக் கண்ணுடைய வள்ளலா ராதீனமும் சைவ சமயத்தை நிலை நாட்ட எடுத்துக் கொண் டுள்ள பெருமுயற்சி நாம் மறக்குந் தகையதன்று.

மக்கள் பிறப்பொழுக்கம் குன்றாமல் அவரவர்களும் தத்தம் சமய நெறியில் நின்று உய்யும் வண்ணம் அரசியலார் எடுத்துக் கொள்ளும் பெருமுயற்சியும், அதற்கென்று நியமிக்கப்பட்ட தேவஸ்தான போர்டின் கண்காணிப்பின் திறனும் நினைக்குந்தொறும் நினைக்குந்தொறும் அளவிலா மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதற்குக் காரணமாகவுள்ள

திரு. T. M. நாராயணசாமி பிள்ளை அவர்களும், திரு. இராமச் சந்திரஞ் செட்டியாரவர்களும் மேற்கொள்ளும் முயற்சி என்றும் நின்று நிலவும்படி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறைவன் பெருமையை இலக்கண வாயிலாக அறிவுறுத்திக் காட்டும் சைவ சித்தாந்த சாஸ்திர உண்மைகளையும், இலக்கிய வாயிலாக அறிவுறுத்திக் காட்டும் பன்னிரு திருமுறைகளின் உயர்வையும் இத்தகைய மகாநாட்டுச் சொற்பொழிவின் வாயிலாகவும் சிறு வெளியீட்டின் மூலமாகவும் மக்கள் நல்வழியிற் புகும்வண்ணம் இச்சமாஜம் செய்துவரும் சீரியதொண்டு சிறப்பிக்கற்பாலது.

தமிழுலகில் தான் கண்டதொரு நுண்பொருளைத் தனிப்பட்ட முறையிலன்றிச் சர்வகலாசாலையில் பேராசிரியராகவும், ஆராய்ச்சிக் குழுத் தலைவராகவும் இருந்து இளைஞர்களுக்குத் தமிழறிவூட்டி வருவதோடு, சமயம் வாய்த்தபோதெல்லாம் சைவ சித்தாந்த சபையிலும், மகாநாடுகளிலும் பங்கெடுத்துச் சமயப் பணியையும் தம் பணியாகக் கொண்டு தொண்டு செய்துவரும் மஹாமஹோபாத்யாய, பண்டிதமணி - திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் இருமொழிப் புலமைத் திறனும், சாத்திர நுண்ணறிவும் உலகிலறியாதாரில்லை. அறிவும் அனுபவமுங் கொண்ட அத்தகைய பெரியார் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க இசைந்துள்ளது பெரும்பேறு என்றே எண்ணுகின்றோம்.

இம்மகாநாட்டை யடுத்து, ஆண்டுதோறும் நடைபெற்று வரும் சைவ இளைஞர் மகாநாட்டையும் உளமுவந்து வரவேற்பதோடு அம்மகாநாட்டிற்குத் தலைமை தாங்கும் திரு. இராமநாதஞ் செட்டியார், B. A., B. L. அவர்களையும் வரவேற்கின்றோம். ஆங்கிலப் புலமையில் தலை சிறந்த அன்னார் நம்முடைய இளைஞரின் நலங்கருதிச் சமயத் துறையிலும் ஈடுபடுவது கண்டு பெருமகிழ்வெய்துகின்றோம்.

மெய்யன்பர்களே!

சைவ மக்களும், சைவ மடங்களும் மேற்கொள்ள வேண்டியனவை யாவை என்பது பற்றி என் நோக்கத்திற் சில

சில கூறி என் வரவேற்புரையை முடித்துக் கொள்ளுகின்றேன். மக்கள் "உலகியல் வேத நூலொழுக்கம்" என்பதையும் "நிலவு மெய்ந்நெறிச் சிவநெறியது" என்பதையும் உணர்ந்து இறைவன் அருள் நலம் துய்க்கும் வண்ணம், சைவ மடாதிபதிகளும் சித்தாந்த சபையாரும் தற்கால இளைஞர்க்கென்றே சமய அறிவு புகட்டும் வேதாகம சாத்திர பாடசாலையையும், சைவப் பொக்கிஷமாய் விளங்கும் தேவார பாடசாலையையும் நியமித்தும், தேவஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் சமய நூல் நிலையம் ஸ்தாபித்தும், நித்தியமும் திருமுறை ஓதவும், வாரம் ஒருமுறையேனும் மாதம் ஒருமுறையேனும் சொற்பொழிவு செய்யவும் பிரசாரகர்களை நிறுவியும் பரந்த நோக்கத்தோடு பணிபுரிந்து வருவார்களானால் வேத நெறி தழைத்தோங்கி மிகுசைவத்துறை விளங்கி நாடு நலம் பெற்றுய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது நோக்கம் நிறைவேறும் வண்ணம் தோன்றாத் துணையாயிருந்து திருவருள் பாலித்துவரும் இறைவனை மனமொழி மெய்களால் வாழ்த்துகின்றேன்.

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

# ...ய்க்கா வாய்ப்பு

[பத்திராசிரியர்]

தாது ஆண்டு தைத்திங்கள் 19-ம் நாள் என் வாழ்க்கையில் ஒரு முக்கியநாள்; அன்று புலிசை ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து இரண்டாம் பட்டத்துச் சுவாமிகள் ஆலயத்தின் கும்பாபிடேக தினம்; ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் அன்று காலை 4-30 மணிக்கு, சிற்றுணவு கொள்ளாமல் என் மனைவியுடன் வரும்படிக் கட்டளையிட்டருளினர். இக்கட்டளையின் கருத்துதான் என்ன என்று ஐயமுற்றிருந்தோம் நாங்களிருவரும். காலைநேரம்; அன்பர்கட்கு அருஞ்சிற்றுண்டிகள்

ஆயத்தமாகும் அமயம்; நாங்களும் ஆலயம்புகுந்தோம். ஆலயம் ஏறத்தாழ ஒருகல் தொலைவிலிருக்கும். அதில் முருகப் பிரான் கோயில் கொண்டிருக்குமிடத்தில்தான், நம் சுவாமி களது சமாதியும் அமைந்துள்ளது.

கும்பாபிடேகம் சுமார் 9 மணிக்கு முடிவுற்றது; எங்க ளிருவரையும் யாகசாலையினுள் வருமாறு கூறியருளினர். அப்பொழுதும் எங்கட்கு ஒன்றும் புலனாகவில்லை. மிகத் தூய்மையான அவ்விடத்திற்குள் நுழைவதற்கும் அச்சம் மிருந்தது. சுவாமிகள் புன்முறுவலுடன் எங்களை நோக்கி யருளி "நீங்களிருவரும் மிக அதிர்ஷ்டசாலிகள். யாருக்கும் கிடைக்கா பாக்கியம் உங்கட்குக் கிடைத்திருக்கின்றது; வாழ்க்கையில் இதை என்றும் மறக்கமாட்டீர்கள்" என்று கூறி, கைநிறைய வில்வத்தைக் கொடுத்து, "நான் சில வாக் குறுதிகள் உங்களிடம் பெறப்போகின்றேன்" என்றனர்.

முதலாவதாக "சுத்த ஆகாரமே உண்ண வேண்டும். பானவகைகளில் ஒழுங்காக இருக்கவேண்டும். இது உங்கட்கு வேண்டா. இருப்பினும் உறுதிகூறுக" என்று எங்கள் கை நிறைந்த வில்வத்தைக் கலசத்தில் போடப் பணித்தனர்.

பின் இன்னுங் கொஞ்சம் வில்வத்தைக் கொடுத்துக் "கூடியவரை பொய்சொல்வதில்லை" என்று உறுதி கூறுக என்று கூறினர். ஏன் "கூடியவரை" என்கிறீர்கள் என்று அடியேன் கேட்டேன். "தம்பி! முழுதுந்தான் பொய் பேசாதிருக்க வேண்டும்; இக்காலத்தில் அவ்வாறு இருத்தல் முடியுமோ! என்று எண்ணியே இங்ஙனங் கூறினேன்" என்றார். இரண்டாவது உறுதியுங் கொடுத்தோம்.

மூன்றாவதாக "உலக சுகங்களை அனுபவிப்பதிலும் கூடியவரை மிதமாக இருக்கமுயல்கின்றேன்" என்றும், நான் காவதாக "இயன்றவரை பிறருக்கு உதவிசெய்ய முயல் வேன்" என்றும், இறுதியாக "குருபக்தி, கடவுள் பக்தி, அடியார் பக்தி இவைகளைத் தவறாமல் செய்து வருவேன்" என்றும் வினாவிடை வாயிலாக உறுதிமொழிபெற்று, "உங் கட்கு இன்று உபதேசம் செய்யப்போகின்றேன்" என்று திருவாக்கருளினர்.

பின் மந்திரத்தை எங்கள் காதில் ஓதியருளினர். மடத்து அன்பர்கள் அனைவரும் இக்காட்சியை வியந்து நோக்கினர். வாழையடி வாழையாக உபதேசம் செய்வது வேறுமுறை; ஒருபெரும் போர்வையால் சுவாமிகளும், உபதேசம் பெறுவோரும் போர்த்துக்கொண்டு காதொடு காது மந்திரம் ஓதுவார். அவ்வமயம் பிறர் கேளாவண்ணம் மணியும் ஆட்டப்படும். இவ்விதச் சடங்கொன்றுமின்றி எங்கட்கு உபதேசம் செய்தருளினர்.

இறைவனே! என்னே இவர்தம் ஈடிலா நோக்கம்! காலத்தோடும், உலகத்தோடும் ஒட்ட ஒழுகும் பெற்றி வாய்ந்த பெருங்கருணையை அன்பர்கள் அறிவது அவசியமன்றோ! சீடனைத் தேடி குரு வருவார்; ஆட்கொள்வார் என்னும் உண்மை இதனல் தெள்ளிதின் விளக்கமுறுதல் தெளிவன்றோ! அடியேனுக்கும் இவ்வாய்ப்பு வாய்க்கா வாய்ப்பன்றோ!

உ

வேலுமயிலும் துணை

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

# “விநாயகர்”

[திரு. வ. ம. உருத்திரசாமி ஐயர்,
தலைமை ஆசிரியர், ஸ்ரீமத் ஞானியார் கலாசாலை, புலிசை]

உலகில் தோன்றும் பிறவிகள் எழுவகையின. அவற்றுள் சிறந்தது ஆறு அறிவினையுடைய மக்கட் பிறப்பே. அம் மக்களும் தம் பரு உடலினையே முற்றும் அறிந்திலர்; தம் உடலின் பின் புறத்தைக் காண இயலாது மயங்குவர்; முன்னுள்ள முகத்தினையும் காணக் கண்ணாடி தேடுவர். இத்தகையோர் உடலுள் இயங்கும் நுண்ணிய உயிரினை எங்ஙனம் அறிவர். அவ்வுயிரினுள், நுணுக்கரிய நுண்ணுணர்வாயும், உயிர்க் குயிராயும் விளங்கும் இறைவனை இவர் அறிவரோ?

அறியார். இத்தகைய அறிவிலிகளாகிய ஏழை ஆன்மாக்களை உய்விக்க வேண்டி கருணைகூர்ந்த இறைவன் தன்னை யாவரும் கண்டு வழிபட்டுய்ய மூர்த்திகளாய் உருக் கொண்டனன். சைவ மக்கள் வணங்கும் மூர்த்திகள் பலருள்ளும், சிறந்தவர் விநாயகர், முருகன், சிவபெருமான், சிவசக்தி, சண்டேசுரர் ஆகிய ஐவர். அவருள் முதன்மை யுற்றவர் விநாயகர். எல்லாரையும் அடக்கி நடத்துபவர் நாயகர் எனப்படுவர். அத்தகைய நாயகர்கட் கெல்லாம் தலைமை பூண்டு, அவர்களை இயக்குபவர் விநாயகரே. அன்றியும் தன்னினும் தலைசிறந்து விளங்கித் தன்னை இயக்குபவர் ஒருவரும் இலர் என நிற்பவர் அநாயகராகிய விநாயகர், என்பர் பெரியோர்.

திருக்கைலாயத்துள் ஓவியச்சாலை ஒன்றுளது. அதனுள் அம்மையப்பராம் இருவரும் ஓர்கால் உலாப் போந்தனர். ஆண்டு பொறிக்கப்பட்ட ஓவியங்களுள், சிவ சத்திகளாகிய ஓங்காரங்கள் இரண்டும் இவ்விருவர் திருமுன், யானை வடிவு கொண்டு மகிழ்ந்தன.

அம் மகிழ்ச்சியில் தோன்றியவர் கஜமுகராம் விநாயகர். இவர் யானைமுகத் தசுரனைத் தாக்க செல்லுங்கால், சேனைகளாகத் தன்னைச் சூழ்ந்த சிவகணங்கட்குத் தலைமை பூண்டு நின்றமையால், கணபதி எனும் நாமம் பெற்றனர்; வேறு எத்தகைய படைகளாலும் ஊறு தனக்கு இல்லை எனத் தருக்கி நின்ற அவ்வசுரனைத், தனது ஒரு கொம்பினைக் கொண்டே அழித்தமையின் ஒற்றைக் கொம்பன் - ஏகதந்தன் ஆயினர். இவர், தந்தத்தினால் தனது தொல்லுரு அழிந்து பெருச்சாளி வடிவத்துடன் எதிர்த்தவனை அடக்கி ஊர்தியாகச் செலுத்தினமையால் மூஷிக வாகனர் ஆயினர். இவர் அசுரன் தொலையவே ஆனந்தமும் அன்புங் கொண்டு, தன்னைச் சூழ்ந்து வணங்கும் விண்ணவர்கட்கு அருள் சுரக்கும் இனிய முகத்துடன் இருந்தமையின் சுமுகன் ஆயினர். அக் கொடியவன் எதிரில் தேவர்கள், தாம் செய்தது போலத் தனது திருமுன்னும் தலையில் குட்டிக்கொண்டு தாழ்ந்து எழுந்து கும்பிடலே தனக்கு ஆகும் வணக்கம் எனப் பணித்தனர்.

ஒரு செயல் தொடக்கத்தில், தன்னை நினைப்பவர்க்கு வரும் விக்கினங்களை நீக்கி, நினையாதவருக்கு விக்கினங்களை ஆக்கும் வன்மையாளராகிய விக்கின ராஜர் இவரே. இத்தகைய இயல்பினையுடைய மூர்த்தி, ஆலயங்கள், ஊர்ச் சந்திகள், தீர்த்தக் கரைகள், நந்தவனங்கள், மலைகள் முதலிய புண்ணிய இடங்களில் எழுந்தருளித் தன்னை வணங்கும் அன்பர்கட்கு அருள் செய்வர். இவரது அருள் எங்கும் என்றும் நிலவுக. உலகம் மகிழ்க.

# தனித்தபோது நினைத்தவை

[தொண்டன்]

இன்றைய உலகப் போக்கை உற்று நோக்குவோம். வேகம். மிக மிக வேகம். எண்ணம், செயல் இன்ன பல வேகங்களினிடையே யுத்த வேகம் வீறிட்டெழுகின்றதைப் பார்க்கின்றோம். உலக முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவோர் சிலர். அமைதியுள்ளம் சிதறி அஞ்சுவோர் பலர். ஒரே எண்ணம். எப்பொழுது விபரீதங்களினின்று விடுபடுவது. மீட்சிக் காலம் உண்டா? அன்றி இதுதான் இறுதிக் காலமோ?

* * *

உலகத்தில் இன்னல்கள் ஒழிதல் வேண்டும். போக்க வழி என்ன? வழி கூறுபவனும் செய்பவனும் யாவன்? மனிதனா? இல்லை. ஒரு சில இன்னல்கள் அவனால் போக்க முடியும். முற்றும் முடியுமோ? முடியும். யாரால்? நாடு செழுமை யடைய, மக்கள் அறிவு, ஒழுக்கம் ஓங்க, அரும் பெருஞ் சக்தி நிறைந்த ஒப்பற்ற பரம்பொருளால். பரம் பொருள். இது என்ன? காட்சி அளவில் காணக்கூடாத ஒன்றைக் கூறுகின்றீர்களே என்கின்றனர் சிலர். இப்பொருளைப் பற்றிய ஆராய்ச்சி வேண்டாம். உலகு உய்ய வேண்டும். இதற்கு மூலகாரணப் பொருள் வேண்டும். இதனைச்

சரித்திரங்கள் "உலகை உய்விக்கும் பெரியோர்" என்று பெயரிட்டு அழைக்கும். இத்தகையோர் அவ்வப்போது தோன்றி மக்களின் அஞ்ஞான இருளைப் போக்கி ஞானச் சுடர் விளக்கைக் கொளுத்துகின்றனர். செயற்கரிய செயல்களைப் புரிகின்றனர். இவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றுவோரும் இவர்தம் கருத்துக்களைப் பொன்னே போல் போற்றி யாவருக்கும் போதிக்கின்றனர். இச்செயலால் மக்கள் நல்லறிவு பெற்று நலனுறுகின்றனர். இத்தகையோருக்கு அருங்குணங்கள் அமைந்திருத்தல் இயல்பே. பின்பற்றுவோரும் பெற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆக இத்தகைய பெரியோர், அவரைப் பின்பற்றுவோர், மக்கள் ஆகிய இம்முப்பகுதியும் செப்பமுடன் ஒன்றின் உலகம் உய்யும் என்பதில் ஐயம் என்னே!

* * *

மதம், சமயம் இன்ன பலவற்றை யுண்டாக்கியோர் பலர். நமக்கு வேண்டுவது இன்பம். எல்லையில்லா இன்பம். இதனை நல்கியோரை நாம் "பெரியார்", "அடிகள்" என்கின்றோம். இது மட்டுமோ? "கடவுள்" என்று கழறுவதிலும் துணிகின்றோம். போற்றுகின்றோம். அறிவு ஈயும் அருந்தகையோரும், அறிவு பெறும் சமுதாயக் கூட்டமும் இன்றேல் ஒன்றும் நடைபெறாது. இங்ஙனம் பல்வேறு இடங்களில் பல்வேறு தோற்றங்களில் இவர்கள் தோன்றக் குறைபாடு ஒழிந்து குணம் எழுகின்றது. சரித்திரமும் இவர்தம் வரலாறுகளை ஒருவாறு ஓதுவதை உணர்வோம். இவர்களைப் "பெரியார்" என்றழைக்கும் திருக்குறள். அறிவும் செயலும் ஒன்றுபட்டவரே இத்தகையோர் என்று அடை மொழியுந் தந்து அழகு செய்கின்றது. திருமூலர், பெரியார் பெருமையைக் கூறுமிடத்து, "பெரியாருடன் கூடல் பேரின்பமாமே" என்றோதுகின்றனர். பெரியார் பெருமையைப் பேசவும் ஒண்ணுமோ?

* * *

இவர்கள்மாட்டு நம்பிக்கை வேண்டும். நம் உள்ளத்தில் உறுதிபெற்று வளரும் ஐயம் என்னும் வேரை நம்பிக்கை

என்றும் மன வெட்டியாக் கல்வி பெறுதல் வேண்டும். நம்பிக்கை காரணமாகவே அக்காலத்து அமைதி வாழ்வு நடத்தினர் நம் முன்னோர். உலகில் தற்போது பல குறைகள் ஏற்பட்டுள்ளன. கூடியவரை அவற்றிலிருந்தும் ஒவ்வொருவரும் விடுதலை அடைய முயலுதல் வேண்டும். நம் அறிவென்னும் செடியைக் கல்வி என்னும் நீர் பாய்ச்சி வளர்த்தல் வேண்டும். நம்மை நாமே உயர்த்திக்கொள்ள உதவுவன நம்முடைய அறிவும் செயலுமே.

• • •

உலகம் தான் போகின்ற போக்கில் போகின்றது. நாமும் அதனோடே போய் விடுவோம் என்று நினைத்தல் கூடாது. "நாம் யார்" என்பதை அறிந்துகொள்ளல்தான் நாம் பிறந்ததின் பயன், வாழ்க்கையின் பயன் ஆகும். உள்ளத்தில் நல்லெண்ணங்களை வளர்த்தல் இன்றியமையாததாகும். தன்னையறிந்து இன்புறல்வேண்டும்; தன்னைப்படைத்த பெருமானின் உண்மை நிலையை உணர்தல்வேண்டும்.

• • •

நாகரிகச் சின்னங்கள், விஞ்ஞான வளர்ச்சி குன்றியிருந்த அக்காலத்தில் எத்துணை அழகாக, அன்பாக வாழ்க்கை நிலைபெற நடந்தது. அது இப்போது எங்குப் போயிற்று? உலக வேகத்தோடு வாழ்க்கை வேகம் சேர்ந்தும் அரிய பெரிய கருத்துக்கள் மறைகின்றன. ஒரு முடிவு வருவதற்கில்லை.

எனவே நம் செயலை அமைதியுடன் ஒழுங்காக நினைத்துச் செய்தல் வேண்டும். கடவுள் நம்பிக்கை கொண்டு, காரியத்தில் வெற்றிபெற்று மன்னுயிருக்கு நம்மாலியன்றவற்றைச் செய்வோம். இது ஒன்றே நாம் செய்ய வேண்டிய சிறந்த தொண்டு.

# பெரிய புராணமும் தமிழர் நாகரிகமும்

[வித்துவான் - மு. இராசக் கண்ணனார், B. O. L.]

ஓரின மக்களின் நாகரிகத்தை ஆராய்தற்கு முழுத் துணை புரிவன கல்வெட்டுக்கள், செப்பேடு, பட்டயம், நாணயம், ஓவியம், சிற்பம், புதைபொருள்கள் இன்ன பிற ஆகும். ஆயினும் கல்வெட்டு செப்பேடு முதலியவற்றின் உள்ளீடாய் நின்றும் வெளிப்படையாகப் பொருளியல்புகளைத் தெளிவாகக்கூறும் தகுதிபெற்றது மொழி இலக்கியமே. ஆகலின் மிகுதியும் மொழி வழிசென்று காண வேண்டியவர்களாயுள்ளோம்.

தமிழ் மக்களின் நாகரிகமே உலகத்து வாழும் பல இன மக்களின் அடிப்படை நாகரிகம் என்பது உணரப்பட்டு வலுப்பட்டு முதிர்ந்து வளர்ந்து சிறந்து முன் வருகின்றது. கடைச்சங்க காலத்ததும் அதன் முன்னும் பின்னும் ஆகும் சில நூற்றாண்டுகளில் வாழ்ந்த தமிழர்களின் நாகரிக இயல்பினைத் தெற்றெனப் புலப்படுத்துவன, வாய்மை பொலியும் புலவர்கள் தம் மெய்யுரையாகும் சங்க இலக்கியங்களாகும். தொடர்ந்து பத்தாம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டு மக்கள் இயல்புகளை அறிதற்குத் துணைபுரிவன, சில காவியங்களும் தேவாரம், நாலாயிரம் முதலிய நூல்களும் தமிழ் நாட்டலர்ந்த அன்புத் தேனை ஒழுகவிடும் பெரிய புராண நறுமலரும் மற்றைய சில திருமுறை அலர்களும் ஆம்.

புராணம் என்ற பெயரைக் கேட்டவுடன் "'சூதர் மாகதருக்குச் சொல்ல அவர்...........' என்பது போன்ற நூல்தானே!" என்றுரைத்து உண்மையை உள்ளத்திருத் தாது நீங்குவர். பெரிய புராணத்தை அவ்வாறு எண்ணுதல் தற்கொலைக்கு நிகர் என்னல் வேண்டும். ஏன்?

இந்நூல் வேற்றின மக்களின் நாகரிக ஒழுக்கை அறிவிக்கும் வேற்றுமொழி வழி வந்ததன்று. இப்புராணத்

திற்கு, முதலும் வழியும் ‘ வடவேங்கடம் தென் குமரி ’ எல்லையுட்பட்டனவே. ‘ மாதொரு பாகனுர்க்கு வழிவழி அடிமை செய்யும்’ ஆதி சைவ அந்தணர் மரபில் தோன்றித் தமிழ் ‘ நாடு வாழ் அரசர் ’ இல்லத்தில் வளர்ந்து, ‘ பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம் ’ பெற்ற மங்கையாரையும், ‘ வேளாண்மை மிக்க திருஞாயிறு கிழவர் ’ திருமகளார் சங்கிலியாரையும் திருமணம் புரிந்த பெருந் தமிழ்ப் பெரியார் திருஆரூரார் அருள்செய்த திருத்தொண் டத்தொகை இதன் முதல் நூல். ‘ ஆதிசைவ மறையோன் பால் தோன்றி ’ நம்பி ஆண்டார் நம்பி என்னும் பெயருடன் பொல்லாப் பிள்ளையார் அருளெய்தி, ‘அருமறையைச் சிச்சிலி பண்டருந்தத் தேடும் அதுபோல அன்று ; இது என்றும் உளதாம் ’ என்று அப்பிள்ளையாரே தேவாரத் திருமுறை களின் பெருமையைக் கூறக் கேட்டுணர்ந்து பாடிய அந்தாதி இதற்கு வழிநூல். வேளாண் தமிழ்க் குடியில் பிறந்து கல்வி கற்று அமைச்சராய்த் தொண்டாற்றிக் கல்வெட்டு ஏடு பட்டயும் ஆம் எல்லாவகையான வரலாற்றுச் சான்று களையும் ஒப்புநோக்கித் தொகுத்து உண்மைகண்ட பின்னர்ச் சேக்கிழார் பாடிய பெரிய புராணம் சார்பு நூல்; எனின் இந்நூல் தமிழர் நாகரிகத்தினைத் தெளிவிக்காது வேறெதனைக் குறிக்க வல்லது ?

சமயத்தையே குறித்துத் திகழும் இந்நூலோ நாகரிகத் தைக் குறிப்பது எனச் சிலர் வினவுகின்றனர். சமயத்தின் பயன் என்ன ? செயலற்றுத் தொல்லையற்ற ஓய்வில் திளைத் துக் கிடத்தலன்றோ ? இந்நாளில் உலகத்தில் ஈடுபடுதலையே முழு நெறியாகக் கொண்டு அரசியலே இறைவன் அடியிணை எனக் கருதி ஈடுபாடுற்று வாழ்வோரும், ‘ யான் சில நாள் அரசியலிலிருந்து ஓய்வு பெற விரும்புகின்றேன் ’ என்று அரசியலினின்றும் விலகுவதைக் கேட்கின்றோம் ; காண்கின் றோம். இங்ஙனம் ஓய்வு என்று அவர்கள் கூறுவது யாது ? உலகக் கலப்பால் களைத்த அவர்தம் உள்ளம் உலகத் தொடர் பின்றி வாழ விரும்புகின்றது. அவ்வாறு வாழ்வதால் உள் ளம் அமைதியுறும் என்று கருதுகின்றார்கள். அவ்வண்ணம்

வாழ்தற்கு இயற்கை அழகு செறிந்த பேரிடங்களுக்குச் செல்கின்றனர். அங்குப் பசிய புல்லையும் பழுத்த மரங்களை யும் பலநிற மலர்களையும் வெண்ணிற நுரையுடன் கலந்து வீழும் நீர் வீழ்ச்சியையும் கண்டு அவற்றிலேயே கருத்தை இருத்தி மகிழ்ந்து அதற்கப்பாலும் எண்ணி இவற்றைப் படைத்த ஆண்டவன் பெருமையே பெருமை என உள்ளம் குளிர்ந்து கண்மூடிப் பேச்சற்று ஓய்ந்து விடுகின்றனர். இவ்வாறு மகிழ்வூட்டும் இயற்கையும் இறைவன் பெருங் கூத்தின் பயனாகும். இறைவன் திருக்கூத்தைக் கண்ட ஆரூரர் 'மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்' என்றார் சேக் கிழார். அக்கூத்தினை இயற்கையில் காணும் அரசியல் அறிஞரும் மாறிலா மகிழ்ச்சியில் ஆழ்தல் ஒருதலை. மகிழ்ச் சியில் படிந்து கிடத்தற்குக் காரணமாய ஓய்வே சமயத்தின் பயனாகும்.

(தொடரும்)

## முருகன் செந்தமிழ்க் கழகம், மயிலம்

## இரங்கற் கூட்டம்

5 - 2 - 43 அன்று மாலை 5 மணிக்கு மயிலம் சிவத் திரு சிவஞானபாலய சுவாமிகள் தலைமையில் மயிலம் முருகன் செந்தமிழ்க் கழகத்தின் சார்பாக ஓர் இரங்கற் கூட்டம் நடை பெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

சென்னைத் தமிழ்ச்சங்கத் தலைவரும், செந்தமிழ்ப் புர வலரும் ஆகிய திவான்பகதூர் கிழைகிழார் - உயர்திரு. கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள், அண்ணாமலைப் பல் கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளரா யிருந்த இலக்கணம் உயர்திரு. கந்தசாமியார் அவர்கள், திருச்சி செயிண்ட் சோசப் கல்லூரித் தலைமைத் தமிழ் விரிவுரையாளர்

வித்துவான் உயர்திரு. நடேச முதலியாரவர்கள், திருமுதுகுன்றம் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் உயர்திரு. இ. சிவகுருநாதப் பிள்ளை அவர்கள் ஆகிய நான்கு தமிழ்ப் பெருமக்களும் அண்மையில் நம் தமிழ்நாடெங்களும் தவிக்கவிட்டு மறைந்தமை ஈடுசெய்ய முடியாத ஒரு பெரும் இழப்பாகும். அவர்களின் பிரிவாற்றாமை குறித்து இக்கழகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தை அவர்கள் இல்லத்தார்க்கும் நம் தமிழ் நாட்டவர்க்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் உபந்நியாசக் குறிப்புகளினின்று

## உதிர்ந்த மலர்கள்

[தொண்டன்]

1. உலகத்தார் தினமும் தவறாது செய்யவேண்டியவை.
   1. ஏதேனும் ஒரு நல்ல நூல் படித்தல்.
   2. பெரியார் ஒருவருடன் கூடல்.
   3. ஏதேனும் ஓர் அல்பதானம்.
2. ஆசாரியன் என்பவன்.
   1. சாஸ்திர அர்த்தத்தை மனதில் தொகுத்தவன்.
   2. தன்னைப்போல் மாணவர்களையும் இருக்க வைப்பவன்.
   3. சாஸ்திரத்தைத் தானே ஆசரிக்கிறவன்.
3. உத்தம பிதா எல்லோருக்கும் உதவும் பிள்ளையை விரும்புவான்.
   மத்திம பிதா பரகதிக்காக உதவும் பிள்ளையை விரும்புவான்.
   அதம பிதா தற்காலத்திற்குதவும் பிள்ளையை விரும்புவான்.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaga[illegible] [illegible] for the Saiva Siddhanta Maha Samaj[illegible], [illegible] "Thiruvarul[illegible]m", 22-A, Kallukaran Street, Myla[illegible] Madras.